

# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தில் நவராத்ரி உத்ஸவம்

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தில் நவராத்ரி உத்ஸவத்தையொட்டி புதிதாக கட்டியுள்ள நவராத்ரி மண்டபத்தை ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் 08.10.10 வெள்ளி மாலை திறந்து வைத்தார்.

இரவு நடைபெற்ற நவராத்ரி உத்ஸவத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் உத்ஸவர் நவராத்ரி மண்டபத்திற்கு எழுந்தருளினார். ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெற்ற இசை விழாவில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கர்நாடக சங்கீதத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த 265 வித்வான்களுக்கு 'ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்வான்' விருது வழங்கி ஆசீர்வதித்தார்கள். விழாவில் அருளுரை ஆற்றிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் 'சங்கீதம் இதயத்திற்கு சாந்தியை தருகின்ற சாஸ்திரம்' என்றும் சங்கீத வித்வான்களின் முன்னேற்றத்திற்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் பல விதங்களில் உத்ஸாகம் அளித்து வருகிறது, ப்ரபல சங்கீத வித்வான்களுக்கும், வளர்ந்து வருகின்ற இசை கலைஞர்களுக்கும் விருதுகளை வழங்கி ஊக்கம் அளித்து வருவதாகவும், வருடந்தோறும் நவராத்ரி முதல் நாள் இசைக்கலைஞர்களுக்கு ஆஸ்தான வித்வான் பட்டம் கொடுத்து கௌரவித்து வருகிறது எனவும் கூறினார். இந்த வருடம் நடைபெற்ற உத்ஸவத்தில் கீழே கொடுத்துள்ள விவரப்படி சங்கீத வித்வான்கள் கௌரவிக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| சமய சொற்பொழிவாளர்கள் | - | 3 |
| திவ்யநாம பஜனை பாகவதர்கள் | - | 2 |
| ஹரிகதை வித்வான்கள் | - | 1 |
| வாய்ப்பாட்டு | - | 38 |
| வீணை | - | 3 |
| பக்திப் பாடல்கள் | - | 2 |
| புல்லாங்குழல் | - | 3 |
| வய ன் | - | 15 |
| மிருதங்கம் | - | 48 |
| கடம் | - | 5 |
| கஞ்சீரா | - | 2 |
| மோர்சிங் | - | 4 |
| கேரளா பஞ்ச வாத்யம் | - | 1 |
| சாக்ஸபோன் | - | 8 |
| நாதஸ்வரம் | - | 75 |
| தவில் | - | 55 |
| | | ------------------- |
| | | 265 |